Erziehungsdepartement des Kantons Basel-Stadt

Gewerbeverband Basel-Stadt



**Dr. Christoph Eymann**
Vorsteher des Erziehungs-departements Basel-Stadt



**Peter Malama**
Direktor des Gewerbe-verbandes Basel-Stadt

## பாசல் நகரின் தொழில் மற்றும் கல்விபற்றிய சந்தைக்கான இதயபூர்வமான அழைப்பிதழ்

கட்டாயப்பாடசாலைக் காலத்தை முடிக்கும் பிள்ளைகளின் பெற்றோர்களே!

சுவிசின் பொருளாதாரம் நன்றாக அமைந்துள்ளது. எமது தொழிற்சாலைகள் உலகரீதியாக வெற்றியீட்டியுள்ளது. அதற்கென நன்கு தேற்சிபெற்ற தொழிலாளர்கள் தேவை. எந்த நாட்டவர் என்பது பிரச்சினையில்லை. போத்துக்கல், சுவிஸ், துருக்கி அல்லது குறெவாற்சியராகவிருக்கலாம்: எவரிடம் திடமான கல்வித் தேர்ச்சியுள்ளதோ அவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்பட்டு சுவிசின் தொழிற்சாலைகள் மற்றும் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்குப் பொறுப்பாளியாகவிருப்பதுடன் தாமும் பயனடையலாம்.

இந்நாட்டு இளம்வயதினரிலும் பார்க்க வேற்றுநாட்டுப் பெயர்களைக்கொண்ட மாணவர்களுக்கு ஒரு தொழிற்கல்வி எடுப்பதில் சிக்கல்கள் இருக்கும் நிலையில் இது எப்படி சாத்தியமாகும்? என உங்களுக்குள் கேள்வி எழும். எதற்காக மூன்றிலொரு பங்கான வேற்றுநாட்டு இளம்வயதினர் கட்டாயப்பாடசாலைக் காலமுடிவின் பின் எந்தவொரு தொழிற்கல்வியையும் தொடரமுடியாத நிலையில் உள்ளனர்? எமக்கும் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் தெரியாது. ஆனால் நாம் இந்நிலையை மாற்ற விரும்புகிறோம்.

பல இளம் வயதினருக்கு இறுதித்தேர்வுப் பட்டத்துடனான தொழிற்கல்வி, தொழிற்சாத்தியங்களைப் பெறப் பொருத்தமான வழியாகும். யார் ஒரு திருப்திகரமான தொழிலைச் செய்கிறார்களோ அவர்கள் திருப்தியாக உணர்வது மட்டுமல்லாமல் சமூகத்திலும் நல்ல இடத்தைப் பெறுவர். எந்தளவிற்கு மாணவ மாணவியர் பயிற்றுவிக்கப்படுகிறார்களோ அந்தளவிற்கு அவர்கள் தொழில்வாய்ப்பின்றி நகரத்தின் (சோசல்) உதவியிற் தங்கியிருக்கும் சாத்தியமும் குறைவாக அமையும்.

ஆகவே கட்டாயப் பாடசாலைக் காலத்தை முடித்துத் தொழிற்தெரிவை எதிர்நோக்கி நிற்கும் பிள்ளைகள் உங்களுக்கு இருப்பின் பாசல்நகரின் மூன்றாவது தொழிற்கல்விச் சந்தையை எக்காரணம் கொண்டும் தவறவிடாதீர்கள். 2010 ஐப்பசி 14ம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரை பாசல் மெஸ்சே நிலையத்தில் சுவிஸ் கல்வித்திட்டத்தின் தொழிற்பாடுகள் பற்றிக் காண்பிப்போம். நாம் பதினொரு மொழிகளில் உங்கள் பிள்ளைகளின் தொழிற்தேர்வுக் கல்விக்கான பலதரப்பட்ட சாத்தியக் கூறுகள் பற்றி அறியத்தருவோம். உங்கள் மகன் மகள்மாரையும் அழைத்து வாருங்கள் தொழிலுலகத்தில் 250 சாத்தியக்கூறடங்கிய பாதைகள் உள்ளனவென்பதைக் காண்பிப்போம். அனுபவம் வாய்ந்த நெறியாளர்கள் நான் எங்கே எப்படி ஒரு தொழிற்கல்வியைப் பெறுவது? தொழிற்கல்வியின் பின் நான் என்ன செய்யலாம்? நான் தொழிற்கல்வியின் பிற்பாடு எப்படி மேற்கல்வியைத் தொடரலாம்? நான் எந்த தொழிற்துறைப் பாடசாலைக்குச் செல்லலாம்? அல்லது நான் எவ்வளவு சம்பாதிக்கலாம்? இவை போன்ற பல கேள்விகளுக்குப் பதிலளிப்பார்கள்.

இதயபூர்வமாக வரவேற்பதோடு தங்கள் நல்வரவையிட்டு மகிழ்ச்சியடைவோம்.

Dr. Christoph Eymann

Peter Malama

